Registered as a News paper in Ceylon

விலை சதம் 20

JAFFNA COLLEGE 8 MAY 1972 GRADUATE LIBRARY

# ஈழநாடு

வார மலர்

மலர் 14 | ரபி. அவ் 22 | சித்திரை 25 | ஞாயிற்றுக்கிழமை | (7—5—72) | இதழ் 87




# தவறணை முறை சிக்கல்களை சீராக்க ஏற்பாடு

## காரியாதிகாரிகள் தலைமையில் குழுக்கள் நியமனம்

யாழ்ப்பாணம், ஞாயிறு யாழ்ப்பாண மாவட்டத்தில் இம்மாதம் முதல் திகதியிலிருந்து அமுலுக்குக் கொண்டுவரப்பட்டுள்ள தவறணை முறையில் தோன்றியுள்ள சிக்கல்களை நீக்கி தவறணைமுறையைச் சிறப்பாகவும் சீராகவும் செயல்படுத்துவதற்கான ஏற்பாடுகள் நேற்று யாழ் மாவட்ட அரசாங்க அதிபர் திரு. விமல் அமரசேகர தலைமையில் நடைபெற்ற மாநாடொன்றில் மேற்கொள்ளப்பட்டது.

கள்ளுத்தவறணைகள் திறக்கப்பட்டுள்ள இடங்கள் சம்பந்தமாக இப்போது தோன்றியுள்ள பிரச்சினைகளுக்குத் தீர்வுகாணவும், கள்ளுத் தவறணைகளைப் பொருத்தமான இடங்களில் அமைக்கவும், சீவல் தொழிலாளர் பிரச்சினைகள், மேலதிகமாகக் கிடைக்கும் கள்ளு ஆகிய அவ்வப்போது தோன்றக்கூடிய பிரச்சினைகளை ஆராய்ந்து உடனுக்குடன் தீர்வு காண்பதற்கென கிராம சபை, பட்டினசபை நகரசபை ஆகிய உள்ளூராட்சி மன்றங்களின் தலைவர்கள், அந்தந்தப்பகுதி பொலிஸ் அதிகாரிகள், கூட்டுறவு இன்ஸ்பெக்டர்கள், கலால் அதிகாரிகள் மற்றும்சில பிரமுகர்களையும் கொண்ட குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளன. இக்குழுக்களுக்கு அந்தந்தப் பகுதி காரியாதிகாரி தலைவராகக் கடமையாற்றுவார்.

இக்குழுக்களால் தீர்வு காணமுடியாத பிரச்சினைகள் அரசாங்க அதிபரின் கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டதும் அவற்றை அவர் அமைச்சு அதிகாரிகளுடன் ஆலோசனை செய்து அவற்றுக்குத் தீர்வுகாண நடவடிக்கை எடுப்பார்.

## சுவீப் முடிவுகள்

கொழும்பு, ஞாயிறு தேசியலொத்தர்சபையின் தலைமைக் காரியாலயத்தில் நேற்று இழுக்கப்பட்ட 393-வது சுவீப் சீட்டிழுப்பு முடிவுகள் வருமாறு:-

1வது பரிசு
27 E 0390 ரூ. 74,900

2வது பரிசு
08 B 0487 ரூ. 29,960

3வது பரிசு
26 L 0587 ரூ. 7,490

(2ம் பக்கம் பார்க்க)

## இந்தி சினிமா கலைஞர்கள் வகையாக அகப்பட்டனர்!

பம்பாய், மே. 6 வருமானவரி கணக்குக்காட்டாத ஆடம்பர வாழ்க்கை நடாத்திக் கொண்டிருந்த பம்பாயிலுள்ள பிரபல இந்தி நடிகர், நடிகைகள், டைரக்டர்கள், தயாரிப்பாளர்கள் வகையாக மாட்டிக்கொண்டிருக்கிறார்கள்!

வைரங்களாகவும், தங்க நகைகளாகவும் பதுக்கியும் ஒளித்தும் வைத்திருந்தவர்களும், வெளிநாட்டு வங்கிகளில் லட்சக்கணக்கான பணத்தை போட்டுவைத்திருந்த தஸ்தாவேஜுகளும் வருமானவரி அதிகாரிகளிடம் அகப்பட்டுக் கொண்டன.

5 பிரபல இந்திநடிகர்கள், 3 நடிகைகள், 13 தயாரிப்பாளர்கள், டைரக்டர்கள் உட்பட 28 திரைப்பட கலைஞர்களின் வீடுகளில் 250 வருமானவரி அதிகாரிகள் புதன்கிழமையில் நடத்திய "வேட்டை"யில் "ரகசியங்கள்" அம்பலத்துக்கு வந்தன.

தொடர்ந்து விசாரணை நடைபெறுவதால், கலைஞர்களின் பெயர் விபரங்களை வெளியிட வருமானவரிக் கமிஷனர் மறுத்துவிட்டார்.

## 'தெளிவான அறிக்கைகளை தயாரித்து அனுப்புங்கள்'

### தூதுவர் மகாநாட்டில் பிரதமர்

கோட்டை, சனி "வெளிநாடுகளிலிருந்து நீங்கள் இங்கு அறிக்கைகளை தெளிவாகத் தயாரித்து அனுப்புங்கள். உலகப் பிரச்சினைகளைப்பற்றிக் குறிப்பாக ஆசியாவின்பிரச்சினைகள்பற்றி நீங்கள் நன்கு தெரிந்து வைத்திருக்கவேண்டும்'

வியாழக்கிழமையன்று இலங்கைத் தூதுவர்கள் மகாநாட்டில் பிரதமர் திருமதி பண்டாரநாயகா உரை நிகழ்த்துகையில் மேற்கண்டவாறு தூதுவர்களைக் கேட்டுக்கொண்டார்.

தொடர்ந்து 5 நாட்கள் நடைபெறும் இம் மகாநாடு பிரதமரின் வாசஸ்தலமான அலரிமாளிகையில் நடைபெறுகிறது. இம்மகாநாட்டில் 11 தூதுவர்கள் கலந்துகொள்கிறார்கள். வெளிநாட்டு அமைச்சைச் சேர்ந்த உயர் அதிகாரிகளும் இத்தூதுவர் மகாநாட்டில் கலந்துகொண்டனர்.

தொடர்ந்து நடைபெறும் இம்மகாநாட்டில் இலங்கையின் வெளிநாட்டுக் கொள்கை உட்பட அன்னியச் செலாவணி, உள்நாட்டு உற்பத்திப் பொருள்களுக்கு வெளிநாடுகளில் கிராக்கியை உண்டுபண்ணுதல்போன்ற பல்வேறு விடயங்கள் ஆராயப்படலாமென எதிர்பார்க்கப்படுகிறது.

அளவெட்டி அடைவு கடைச் சம்பவம்

## நான்கு லட்சம் கொள்ளையுடன் கொலைக் குற்றச் சாட்டும்

### ஏழுபேர் மீதும் வழக்குத் தாக்கல்

யாழ்ப்பாணம், ஞாயிறு அளவெட்டி அடைவுகடையில் நான்கு லட்சரூபாய் பெறுமதியான பொருள்களைக் கொள்ளையடித்ததாகவும், அடைவுகடை உரிமையாளர் தம்பிமுத்துவைக் கொலை செய்ததாகவும், சட்டவிரோதமாகக் கூட்டம் கூடியதாகவும்குற்றம்சாட்டி அளவெட்டிக்கொள்ளை சம்பந்தமாகக் கைதுசெய்யப்பட்டுள்ள ஏழு சந்தேகநபர்கள் மீதும் நேற்றுப் பொலிசார் வழக்குத் தாக்கல் செய்தனர்.

மல்லாகம் நீதிமன்றத்தில் சுன்னாகம் பொலிஸ் இன்ஸ்பெக்டர் திரு. எம். குணரத்தினம் இந்த வழக்கைத்தாக்கல் செய்தார்.

எதிரிகள் ஏழு பேரும் தொடர்ந்து றிமாண்டில் வைக்க உத்தரவிடப்பட்டனர்.

## 40,000 பேருக்கு மறுவாழ்வுத்திட்டம்

### லோகசபையில் தகவல்

புதுடில்லி, மே 6 "இலங்கை-இந்திய ஒப்பந்தத்தின்கீழ் இவ்வருடம் 40,000 இந்திய வம்சாவழியினர் இலங்கையிலிருந்து நாடு திரும்புகிறார்கள். இவர்களின் மறுவாழ்வுக்கான சகல ஒழுங்குகளையும் அரசு செய்துவிட்டது. அவர்கள் இங்கு வந்து வசதியாக தொழிலோ விவசாயத்தையோ மேற்கொள்ளலாம்.

பாரத, தொழில், புனர்வாழ்வு அமைச்சின் உதவி அமைச்சர் திரு பாலகோவிந்த வர்மா லோகசபையில் பேசுகையில் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் லோகசபை விவாதத்தில் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:-

"இலங்கையிலிருந்து இதுவரை 56,000 பேர் நாடு திரும்பியுள்ளார்கள். இலங்கை-இந்திய ஒப்பந்தத்தின்

[8-ம் பக்கம் பார்க்க]

சிறந்த அலுமினியப் பாத்திரங்களுக்கு



சிறுகதை

# தேவ வீணை

ரியூடர் தனது குடிசையில் தனியாக இருந்தான். அவன் மனைவி தன் சிநேகிதி ஒருத்தியைச் காணச் சென்றிருந்தாள். அவனது புகைக்குழாயிலிருந்து புகை சுருள் சுருளாக மேற் செல்வதைப் பார்த்துக்கொண்டே அவன் தனது சென்ற காலத்தைப் பற்றிச் சிந்தித்தான், நேரம் போய்க் கொண்டிருந்தது. தனிமை அவனைப் பொறுதியற்றவனாக்கியது' தனது கடிகாரத்தை அடிக்கடி பார்த்துக் கொண்டான்.

ரியூடர் மெதுவாக பாடத் தொடங்கினான். அவன் மெதுவாகவே பாடுவது வழக்கம். சில வேளைகளில் உரத்துப் பாடும் பொழுது அவன் மனைவி கேலி செய்வாள். அவன் இப்போது உரத்துப்பாடினான். அவ்வாறு பாடுவது அவன் தனிமையின் தாகத்தைத் தணித்தது. ஒரு பாட்டைப் பாடி முடித்தவுடன் அவன் புதியதொரு பாட்டை ஆரம்பித்தான்

"எனது பாடலைக்கேட்டு ஏன் எனது மனைவி நகைத்தாள்"? ரியூடர் தன்னைத்தானே கேட்டுக் கொண்டான். "எனது பாட்டு இனிமையாகவே இருக்கிறது" அவன் தன் மனதைத் தேற்றிக் கொண்டான். அவன் மீண்டும் ஓர் நாடோடிப் பாடலை பாட ஆரம்பித்தான். அது உண்மைக் கருத்துக்கள் நிறைந்ததாயும், இனிமையாகவும் இருந்தது. அவன் அப்பாடலை முடித்ததும் யாரோ வாசற்கதவை தட்டுவது கேட்டது.

'உள்ளே வாருங்கள்' ரியூடர் அழைத்தான். ஒருவரும் உள்ளே வரவில்லை. ஆனால் கதவை மீண்டும் தட்டும் ஓசை கேட்டது.

"உள்ளே வாருங்கள்" ரியூடர் இம்முறை உரத்துச் சொன்னான். "கதவுகள் திறந்தே இருக்கின்றன. தயவு செய்து உள்ளே வரலாம்" இவ்வாறு கூறிக்கொண்டே ரியூடர் தன் ஆசனத்தில் நின்றும் எழுந்தான். அவன் கதவை நோக்கிச் செல்லமுன்பே மூன்று மனிதர் உள்ளே வந்தார்கள். அவர்களின் முகத்தைப் பார்த்தவுடனே அவர்கள் நெடுந்தூரம் பிரயாணம் செய்ததால் களைப்படைந்திருக்கிறார்கள் என்பதை ரியூடர் உணர்ந்து கொண்டான்.

"ஐயா" அந்த மூவரில் ஒருவன் முன்வந்து கூறினான் "நாங்கள் நெடுந்தூரம் நடந்து வந்ததினால் களைப்படைந்திருக்கிறோம். எமது பிரயாணத்தை மேலும் தொடர்வதற்கு எங்களுக்குச் சிறிதளவு உணவளித்தால் போதுமானது"

"சிறிதளவு உணவுதானே உங்களுக்குத் தேவை' கடவுளே என் மனைவி இந்த நேரம் இங்கே இல்லாமற் போனாள் அவள் இருந்தால் உங்களுக்கு ஒரு விருந்தே வைத்திருப்பேன். ரியூடர் கவலையுடன் கூறினான்.

மூன்று மனிதரும் தங்கள் மேல் அங்கியைக் கழற்றி ஒரு பக்கத்தில் வைத்தார்கள்

"மேசைக்குக் கிட்ட வாருங்கள்" ரியூடர் அழைத்தான் "நான் எனது இராப் போசனத்தை முடித்து விட்டேன். இங்கே இருக்கும் மிகுதி உணவு உங்களுக்குப் போதியதல்ல. உள்ளே போய் வேறு உணவு இருக்கிறதா எனப் பார்க்கிறேன் ரியூடர் உள்ளே போகிறான்.

வழிப்போக்கர் உள்ள உணவை உண்ண ஆரம்பித்தார்கள். ரியூடர் திரும்பி வந்தான்.

"இங்கே எனது மனைவி சுட்ட ரொட்டியும் இருக்கிறது. சிலபழங்களும் இருக்கின்றன. எல்லாம் உங்களுக்குத்தான் எடுத்துக் கொள்ளுங்கள்' ரியூடர் மன நெகிழ்வுடன் கூறி எல்லாவற்றையும் கொண்டு வந்து மேசையில் வைத்தான். "தன்னைத் தேடிவந்த விருந்தாளிகளுக்கு ரியூடர் ஒரு குறையும் வைப்பதில்லை ரியூடர் மேலும் சொன்னான்.

அவர்கள் மூவரும் அமைதியுடன் இருந்தார்கள். சற்றுப் பொறுத்து ஒருவன் கூறினான். 'நாங்கள் உங்கள் வீட்டின் வாசலைக் கிட்டிய போது இனிய பாடலைக்கேட்டோம்'

ரியூடர் மனம் ஆனந்தத்தால் துள்ளியது. ஒருகணம் தனது மனைவியின் பரிகாசத்தையும் அவன் மனதில் நினைத்தான்.

"நான் நேரத்தைப்போக்குவதற்காக பாடினேன்" அவன் கூறினான்.

"திரும்பவும் பாடுங்கள்" மூவரும் ஒருமித்துக் கூறினார்கள்.

ரியூடர் பல பாடல்களைப் பாடினான்.

தங்கள் உணவை முடித்துக் கொண்டு மூவர்களும் ஆசனத்தை விட்டு எழுந்தார்கள்.

அவர்களுள் ஒருவர் ரியூடரைப் பார்த்து "ஐயா! உங்கள் உதவிக்கு நன்றி. நாங்கள் தங்களை உதவிக்குப் பிரதி உபகாரம் செய்ய விரும்புகிறோம். உங்களுக்கு தேவையான பொருளைக் கூறுங்கள்" என்று கூறினான்.

"நான் எனது கடமையையே செய்தேன். பிரதியுபகாரத்தை எதிர்பார்க்கவில்லை' -ரியூடர் சொன்னான்.

'உங்களுக்குத் தேவையானதைக் கூறுங்கள் நாங்கள் பிரயாணத்தைத் தொடர வேண்டும்' மூவரும் ஒருமித்துக் கூறினார்கள்'

'ஒரு சின்னவீணை' -ரியூடர் மெதுவாக ஆரம்பித்தான் 'எனது திருத்தமற்ற விரல்கள் எப்படி தந்திகளைமீட்டினாலும் இனிய ஓசை எழுப்பும் ஒரு சிறியவீணை ஆனால் நகைப்புக்கிடமான வேண்டுகோள்' 'நகைப்புக்கிடமானதல்ல' மூவரில் ஒருவன் கூறினான். இவ்வாறு கூறிக்கொண்டே ஓர் இடத்தைச் சுட்டிக்காட்டினான். ரியூடர் திரும்பிப்பார்த்தான். அங்கே ஒருபொன்மயமான அழகிய வீணையை அவன் கண்டான்.

'நான் இவ்வளவு அழகான வீணையை ஒரு நாளும் கண்டதில்லை' அவன் பெருமகிழ்ச்சியுடன் உரத்துக் கூறினான். அந்த விலையுயர்ந்த வீணையை அளித்த விருந்தாளிகளைத் திரும்பிப் பார்த்தான். அவர்களை அங்கே காணவில்லை. அந்த வீணையின் நரம்புகளை விரல்களினால் தடவிப் பார்த்தான்.

'நான் இந்த வீணையில் உற்சாகமான பாடல்களை இசைப்பேன். என் மனைவி வீடு திரும்பியதும் அவள் ஆச்சரியத்தில் அமிழ்ந்துவாள்' என அவன் தன் மனதில் நினைத்தான்; அவன் வீணையை மீட்டினான். அதனின்றும் இனிய இசை எழுந்தது. உற்சாகமும் உல்லாசமும் பொருந்திய அந்த இசை ரியூடரின் இதயத்தைக் கவர்ந்தது. அவனுக்கு அந்த வீணையை விட்டுப் பிரிந்திருக்க முடியவில்லை.

அவனது மனைவியும் சில நண்பர்களும், அங்கே வந்தார்கள். அவர்களைக் கண்டவுடன் அவன் வீணையை மீட்ட ஆரம்பித்தான். ஒரு தேவதைக்குரிய ஓர் இனிய பாடலை அவன் இசைத்தான். அவன் மனைவி ஏதோ சொல்ல வாயைத் திறந்தாள். ஆனால் அவள் ஒன்றும் கூறமுடியவில்லை. அவளும் அவள் நண்பர்களும் நடனமாடத் தொடங்கிவிட்டார்கள். அவர்கள் அந்த வீட்டினுள்ளே சுற்றிச்சுற்றி நடனமாடினார்கள். பாட்டின் இனிமை கூடும்போது நடனத்தின் வேகமும் கூடியது. பாட்டு நின்றதும் நடனமும் நின்றது. ரியூடர் தன் மனைவிக்கு வீணை வந்த கதையைக் கூறினான்.

ரியூடரின் தேவ வீணை பற்றியும் அதன் புதுமைகள் பற்றியும் செய்திகள் அந்த நாடெங்கும் பரவியது. அந்த வீணையைப் பார்க்க மக்கள் வெகுதூரத்திலிருந்தும்வரத் தொடங்கினர். வந்தவர்கள் வீணையை இசைக்கும்படி ரியூடரைக் கேட்டார்கள். ரியூடர் வீணையில் பாட்டை இசைக்கத் தொடங்கியவுடன் அந்த இசையைக் கேட்பவர்கள் நடனமாடத் தொடங்கிவிடுவார்கள்.

"நிற்பாட்டு ரியூடர்! இசையை நிற்பாட்டு"-நடனமாடிக்கொண்டே அவர்கள் கத்துவார்கள். அவன் சில வேளைகளில் மனமிரங்கி நிற்பாட்டி விடுவான். மற்றும் சில வேளைகளில் இரக்கமின்றித் தொடர்ந்து வீணையை மீட்டுவான். அவ்வாறு இரக்கமின்றி மீட்டுவதால் வீணையின் சக்தியை மற்றவர்கள் உணருகிறார்கள் என அவன் நினைத்தான்.

ஒருநாள் ரியூடரின் ஒரு பகைவன் அங்கே வந்தான். அவன் முன்பு பலமுறைதன் பரிகாசங்களால் ரியூடரை மனம்நோகச் செய்தவன். அன்று ரியூடரை பரிகசிக்கும் நோக்கத்துடனே வந்தான். 'சிறிய குடிசையில் வசிக்கும் ரியூடர் எவ்வாறு வீணைவாசிக்கக்கற்றுக்கொண்டான்?' அவன் அங்கே நின்றவர்களை வினவினான். ரியூடர் அவனை உள்ளே அழைத்துச் சென்றான்.

'உனது வீணையை மீட்டு பார்ப்போம்'- அவன் ரியூடரை அகங்காரத்துடன் கேட்டான். ரியூடர் வீணையை மீட்டத் தொடங்கினான்.

வீணையின் நாதம் அவனைக் கவர்ந்தது. அவனையறியாமலே அவன் நடனமாடத் தொடங்கினான். ரியூடர் நகைத்தான்.

"நிற்பாட்டு - அந்தமனிதன் கத்தினான். ரியூடர்விடவில்லை அவனின் வீணை நாதத்தின் இனிமை மேலும் பெருகியது; அந்த மனிதனின் நடனத்தின் வேகமும் அதிகரித்தது. ரியூடர் சிரித்தான். அவன் மேலும் கத்தினான். ரியூடர் தன் கண்களிலிருந்து கண்ணீர் வடியும்படி சிரித்தான், கண்களைக் கண்ணீர் மறைத்தது. உடனே ரியூடர் தன் இசையை நிற்பாட்டினான், அந்த மனிதன் நிற்கமுடியாமல் நிலத்தில் விழுந்தான். அந்த மனிதன் களைப்பு நீங்கி எழுந்து சென்றவுடன் ரியூடர் தன் வீணையை நோக்கினான். அதனைத் திரும்பவும் மீட்ட அவன் நினைத்தான். தன் விரல்களைத் தந்திகளின்மேல் ஓட்டினான். இசை எழும்பவில்லை.

"தேவவீணை பகைவர்களுடன் வஞ்சம் சாதிப்பதற்காக கொடுக்கப்படவில்லை"- இவ்வாறு இனிய குரலில் யாரோ கூறுவதை ரியூடர் கேட்டான். அவன் நாலு பக்கமும் நோக்கினான், ஒருவரையும் காணவில்லை அவன் மனம் குழப்பமடைந்தது; அன்று இரவு நித்திரையில்லாமல் குழம்பித் தவித்தான். மறுநாள் காலையில் அவன் வீணையிருந்த இடத்தைநோக்கினான்' அந்தத் தேவ வீணை அங்கே காணப்படவில்லை.

[வேல்ஸ் தேசத்து நாடோடிக் கதை]

மூலம்: ஈர்வின் ஜோன்ஸ்

தமிழில்: வ. குகசர்மா

---

## கவிஞர் வால்ட் விட்மன்

கவிஞர் வால்ட் விட்மன் நியூயோர்க் மாநிலத்தில் லாங் ஐலண்ட் என்ற இடத்தில் 1819 மே 31-ந் திகதி பிறந்தார். இவர் அலுவலக ஏவல் சிறுவன் முதல் பத்திரிகை ஆசிரியர் வேலை வரை செய்த பணிகள் பல. இவருடைய கவிதைகள் அமெரிக்கருடைய வாழ்க்கை எப்படி அமைந்திருந்தது என்பதை படமரத்தாணிபோன்று விளக்குகின்றன. இவரது கவிதைகள் ஏறக்குறைய 25 மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன. இவர் 1892 மார்ச் 26-ந் திகதி இவ்வுலகை விட்டு மறைந்தார்.

---

## இன்னா...

நீண்ட நேர இரவுப் பிரார்த்தனைக்குப்பின் பள்ளிவாயிலிலிருந்து வீட்டை நோக்கித் திரும்பிக்கொண்டிருந்தார் ஞானி பாயஸீத் பிஸ்தாமி அவர்கள்.

வரும் வழியிலே ஒரு குடிகாரனைச் சந்தித்தார். அவனது கையிலே ஒரு இசைக்கருவி இருந்தது. அதைமீட்டி விரசமான பாட்டுக்களைப் பாடிக் கொண்டிருந்ததோடுவழிப் போக்கர்களையெல்லாம் வாயில் வந்தபடி திட்டிக் கொண்டிருந்தான் அந்தக் குடிகாரன்.

அவனை நெருங்கிப் புத்திமதி சொல்லப் பாயஸீத் முனைந்தபோது. அந்தக் குடிகாரன் கடுங்கோபம் கொண்டான்; தன்னிடமிருந்த இசைக்கருவியால் அவரைப் பலமாகத் தாக்கித் தலையில் அடித்துவிட்டான். பாயஸீத் அவர்களின் மண்டையில் ரத்தக் காயம் ஏற்பட்டது; இசைக் கருவியும் அவன் தாக்கிய வேகத்தால் உடைந்துவிழ்ந்தது. ஒரு வார்த்தைகூடப் பேசாமல் தமது தலையைப் பிடித்துக்கொண்டே வீடு திரும்பிவிட்டார் பாயஸீத்.

மறுநாள் காலையில், சில இனிப்புப்பண்டங்களையும் ஒரு சிறு தொகையையும் ஒரு நண்பர் மூலம் அந்தக்குடிகாரனுக்கு அனுப்பி வைத்த பாயஸீத், இதோ இந்தச் செய்தியையும் கூடவே அனுப்பினார்.

"உங்களுடைய அருமையான இசைக்கருவி உடைபடுவதற்கு, என் தலை நேற்றிரவு காரணமாக இருந்ததையிட்டு மிகவும் வருந்துகிறேன்; நான் அனுப்பியுள்ள சிறு தொகையைக் கொண்டு புதியதொரு இசைக்கருவி வாங்கிக் கொள்ளவேண்டுகிறேன்."

'மற்றொரு விஷயம். உங்கள் நாவு கசப்பான வார்த்தைகளை அதிகமாக உச்சரித்ததை அப்போது கேட்டேன். நான் அனுப்பியுள்ள இனிப்புப் பண்டங்களின் மூலம் உங்கள் நாவிலுள்ள கசப்புமாறி இனிமை பிறக்குமென்று எதிர்பார்க்கிறேன்."

இதைக்கண்ட அந்தக் குடிகாரன் வெட்கத்தால் தலைகுனிந்தான்.

சிறிது நேரத்தில் அந்தக் குடிகாரனும் அவனுடைய தோழர்களும் பாயஸீத் அவர்களைத் தேடி வந்தார்கள். அவர்கள் அனைவருமே ஒருமுகமாக இப்படிக் கூறினார்கள்.

"மாட்சிமை மிக்க பெரியோரே! அறியாத் தனத்தினாலே எங்கள் வாழ்நாளில் பெரும்பகுதியை இந்தப் பாவவழியிலே கடத்திவிட்டோம். உங்களுடைய பொறுமையும் போதனையும் எங்கள் கண்களைத் திறந்துவிட்டன. இனி நாங்கள் நல்லவர்களாக வாழ முயலுவோம்"

—மூலம்: பராசக்தி

## ...செய்தாரை -

# பரிசுபெற வேண்டுமென்ற நோக்குடன் தரமான படத்தைத் தயாரித்தால் பணம் வாங்காமலே நடிப்பேன்

'ஞானஒளி' என்றதும் நீங்கள் சிவாஜியை நினைப்பீர்கள். ஆனால் நான் 'மேஜரை' நினைக்கிறேன். அவர் நாயகனாக நாடகத்தில் சக்கை போடு போட்ட பாத்திரத்தில்தான் சிவாஜி நடிக்கிறார்! படத்தில் 'அந்தோனி'யாக வரும் நடிகர்திலகத்தை நாடகத்தில் அந்தோனியாக வரும் 'சுந்தரராஜன்' மிஞ்சிவிடுகிறார். அவர் நடிப்பு ஒரு தனிரகம். தமிழக சினிமா சுற்றுலாவின் போது அவரைச் சந்தித்தது இனியநினைவு என்கிறார் 'பிலிம் நியூஸ்' இ. கு. புனிதலிங்கம்.

"ரசிகர்கள் பாராதது ஒரு நடிகனின் விதியாக இருக்கலாம். அவர்கள் வெறியர்களாக மாறக்கூடாது. அப்படி அவர்கள் மாறுவதனால் பல பாரதூரமான விளைவுகள் ஏற்படுகின்றன"

மிகக் குறுகிய காலத்தில் நூற்றுக்குமதிகமான திரைப் படங்களில் நடித்த திரை

**தமிழக சினிமா சுற்றுலா — 2**

யுலகில் "மேஜர்" என்று செல்லமாக அழைக்கப்படும் சுந்தரராஜனை அவரது இல்லத்தில் சந்தித்து பேசிய போது இப்படி என்னிடம் கூறினார்.

"திரையில் ஒலிக்கின்ற அந்தக்கணீர் என்ற குரல் அப்போதும் ஒலிக்கத்தான் செய்கின்றது! பெரும்பாலும் "அப்பா" வேடத்தில் வந்து ரசிகர்களை கவரும் "மேஜர்" எந்த வேடத்திலும் சக்கை போடுபோடுவார் என்பதை அந்தக் குரல் கூறுகின்றது!

நீங்கள் இலங்கை வருவதாக விளம்பரப்படுத்தியிருந்தார்கள். அதற்குப்பின்னர் ஒரு பேச்சையும் காணோமே? என்று நான் கேட்கவும் "மேஜர்" நிமிர்ந்து உட்கார்ந்து கொள்கின்றார். "நான் வருவதாகத்தானிருந்தேன்? உங்களூரில் ரசிகர்களிடையே வெறியர்கள் அதிகம் இருப்பார்கள் போலிருக்கின்றது. அதனால்தான் வராமல்விட்டுவிட்டேன். எப்போதுமே ஓர் அபிமான நடிகரின் விசிறியாக இருக்கலாம் ஆனால், அவரின் மேல் வெறியாகிவிட்டால்... அப்புறம் விளைவுகள்... வேதனைதரக்கூடியதுதானே... உங்களூரில் இருக்கும் எம்ஜி ஆர் மன்றத் தலைவர் உதயகுமார் எனக்குக் கடிதமெழுதியிருந்தார். அவருடன் வேறுசிலரும் எழுதியிருந்தார்கள்; இலங்கைக்கு வந்தால் கறுப்புக்கொடி காட்டுவோம்... எதிர்ப்பு தெரிவிப்போம் என்று... அவர்களுக்கு ஏன் அந்த கிரமத்தை கொடுப்பானேன்

என்று பேசாமலிருந்துவிட்டேன். எனது நிலையை விளக்கி உதயகுமாருக்கும் ஒரு பதில் போட்டிருந்தேன். அவர்கள் என்னைப்புரிந்து கொண்டிருப்பார்கள். இந்த பிரச்னைகளின் விளைவாக நான் இலங்கை வருவதை ஒத்திவைத்து விட்டேன் என்று மேஜர் கூறிமுடிக்கின்றார். அவர் முகத்தில் ஒரு வரட்சிப் புன்னகை!

இவ்வளவு குறுகிய மனம் படைத்த கலைஞர் எம்மத்தியிலிருப்பதுதான் எமது வளர்ச்சியின் வேகம் தடைப்படுவதற்கான அடிப்படைக் காரணமாயிருக்குமோ என எண்ணவே நான் கேட்டுக் கொள்கிறேன்.

### மேஜரின் நாடகங்கள்

சமீபத்தில் உங்கள் நாடகங்கள் ஏதாவது படமாக்கப்பட்டு வருகின்றனவா? இது எனது அடுத்த கேள்வி-

ஏற்கனவே "ஞான ஒளி" திரைப்படமாக்கப்பட்டு வெற்றிகரமாக ஓடிக்கொண்டிருக்கின்றது. அடுத்து நான் டைரக்ட் செய்த "அச்சாணி" நாடகம் திரைப்படமாக்கப் படவிருக்கின்றது! (அச்சாணி நாடகத்தில் சுந்தரராஜனே கதாநாயகனாக நடித்துள்ளார்)

'தமிழ்ப் படங்களின் தரம் உயர எதைச் செய்யவேண்டுமென நினைக்கின்றீர்கள்?...'

"பொதுவாக மட்டமான கதை அம்சம் கொண்ட படங்களை பார்ப்பதில்லையென ரசிகர்கள் முடிவுகட்டிவிட்டால் படங்களின் தரம் தானாக உயர்ந்துவிடும். எமது ரசிகர்களின் ரசனை ஒரேமாதிரியாக அமைந்துவிடுவதால் ஒரே மாதிரியான கதை அமைப்பு பல படங்களில் இடம்பெறுகின்றன. அரசாங்கமும் நல்ல தரமான படங்களை எடுத்து மற்றவர்களுக்கும் வழி காட்டவேண்டும். தரமான படம் தயாரிக்க உதவவேண்டும். நீங்களும்ஜெய்சங்கரும் சேர்ந்து கூட்டாக படம் தயாரிப்பதாக ஒரு செய்தி... அதைப்பற்றி ஏதாவது கூற முடியுமா?

இப்போதைக்கு அந்த எண்ணம் எனக்கில்லை.

பரிசுபெறவேண்டும் என்ற நோக்குடன் நல்ல தரமான கதையுள்ள படம் தயாரிக்க எந்த தயாரிப்பாளர்களா

## மேஜர் சுந்தரராஜனுடன் ஒரு சுவையான சந்திப்பு

வது முன்வரின் நாம் எமது பணத்தை வாங்காமல் அந்தப் படத்தில் நடிப்பேன்!

சமீபத்தில் திரையிடப்பட்டுள்ள "ஞானஒளி" நாடகமாக முன்னர் சுந்தரராஜன் குழுவினரால் நடிக்கப்பட்டு வந்தது. நாடகத்தில் சுந்தரராஜன் ஏற்ற வேடத்தை சிவாஜி படத்தில் ஏற்றிருக்

[redacted]'பிலிம் நியூஸ்' புனிதலிங்கம்

நார். அதைப்பற்றி மேஜரிடம் கேட்டேன்.

-"ஞான ஒளி பார்த்தீர்களா?" சிவாஜியின் நடிப்பு ஓவராக இருப்பதாக கூறுகின்றார்களே?- என்றேன்.

சமீபத்தில்தான் பார்த்தேன்.

### ஞானஒளிபற்றி..

"நான் "ஞானஒளி" நாடகத்தில் நடித்ததற்கும் சிவாஜி திரைப்படத்தில் நடித்ததற்கும் நிறைய வேறுபாடுகள் இருக்கின்றன.

நான் 'அந்தோனி' என்ற பாத்திரத்தை நாடகத்தில் நடத்திச் சென்ற பாணி வேறு சிவாஜி நடத்திச் செல்லும் பாணி வேறு... சிவாஜி அந்தோனியின் பாத்திரத்தை ஒருபுதியகோணத்தில் அணுகியுள்ளார். அதற்காக அவர் சற்று மிகையாக நடிக்க நேர்ந்துள்ளதென நினைக்கிறேன். அவர் ஏற்றுக்கொண்ட பாத்திரத்தை புதிய கோணத்தில் அணுகி முழுவெற்றியையும் அடைந்திருக்கிருர். அதுஅவருடைய திறமை... மொத்தத்தில் ஞானஒளி வெகுசிறப்பாக அமைந்திருக்கின்றது என்றார்.

தமிழ்த்திரை உலகில் நட்சத்திர ஆதிக்கம் பற்றி

பேசிக்கொண்டிருக்கிறதே... அப்படி எதுவுமில்லை. இச்செய்தி உண்மையாக இருந்தால் என் போன்றவர்கள் இத்துறைக்கு வந்திருக்கவே முடியாது...

பேட்டியின் இடையே விட்டுவிட்டு அழைத்துச் சென்று தனக்கும் இடையூறு செய்திவிடுதலை எனக்குக் காட்டி மகிழ்கின்றார்மேஜர். தனதுபுகைப்படத்தில் ஒப்பமிட்டுத்தருகிறார்.

அலறுகின்ற தொலைபேசி அன்று அச்சாணி நாடகத்திற்கு




வதை ஊர்ஜிதம் செய்கின்றது.

"நீங்கள் அவசியம் இன்மைக்கு வரவேண்டும் உங்கள் அன்பு ரசிகர்கள் உங்களை காணத் துடிக்கிருர்கள் என்று நான் கூறவும்—

அந்த அழைப்பை ஏற்று விரைவில் இலங்கை வருவதாக வாக்களித்தார், அத்தோடு அன்றுமாலை அச்சாணி நாடகம் பார்க்க வரும்படியும் அழைப்பு விடுத்தார். நானும் மகிழ்ச்சியோடு ஏற்றுக் கொண்டேன்.

### குருபக்தி

"அச்சாணி" நாடகத்திற்கான டிக்கெட்டுக்கள் ஏற்கனவே விற்பனையாகிவிட்டன. 3,000 பேர் அமர்ந்து ரசிக்கும் மியூசிக் அகெடமி ஹாலில் மக்கள் நிரம்பி வழிந்து கொண்டிருந்தார்கள். மேஜரின் ஏற்பாட்டின் படி எனக்கு இசையமைப்பாளர்களுடன் முன்வரிசைஆசனம் தரப்பட்டிருந்தது. நாடகம் ஆரம்பிக்கும் மணி அலறுகின்றது. தியேட்டர் அதிபர் காலில்சுந்தரராஜன் விழுந்து ஆசிபெற சகநடிகர்களான சிவகுமார், பானுமதிபோன்றோர் மேஜரின் காலில் விழுந்து ஆசி பெறுகின்றுர்கள். அவர்களது குருபக்தி அவர்களை உயர்த்துவதை அவதானிக்கிறேன்.

# கொழும்பில் ஓர் இசை நாடகம்!

இடைந்த சில நாட்களாக தமிழ் நண்பர்கள் சந்தித்த போது 'பொன்விழா' காணும் நடிகமணி வி.வி. வைரமுத்து கொழும்பில் மேடையேற்றும் 'மயானகாண்டம்' நாடகம் குறித்துக் கதைத்தார்கள்.

"பலமுறை பார்த்த நாடகம் தான்! இருந்தாலும் இன்னொருமுறை பார்ப்போம்" என்ற எண்ணத்துடன் 29-4-72 மாலை ஐந்தரை மணிக்குபம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்துக்குச் சென்றேன்.

ஆறரை மணிக்கு நாடகம் என்றுல் ஏழு மணியளவில் திரையைத் தூக்கும் தமிழ் ரசிகப்பெருமக்கள், ஏழுமணிக்கு ஆரம்பமாகவிருந்த நாடகத்தைப் பார்க்க ஐந்தரை மணியிலிருந்தே மண்டபத்தில் நிறைய ஆரம்பித்தனர்;

மணி ஆறு நிமிடங்கள் நாற்பது- ஆர்மோனியம், மிருதங்கம், வயலின் வாத்தியங்கள் எழுப்பும் இன்னிசை மண்டபத்தில் தவழ்கின்றன. பியானோ எக்கோடியன், ஜொலிகோல் மிதூர் போன்ற மேல்நாட்டு இசைக்கருவிகளின் ஓசையில்லாமல் கேள்விக்கணத்தில் ஒரு தமிழ் நாடகத்தை மேடையேற்றிய பெருமையை காசிகேசன்தனை

வசந்தமான சபையினர் தட்டிக்கொள்கின்றனர்.

### உள்ளத்தை பறிகொடுத்தனர்

சரியாக ஏழுமணி- திரை விலகுகிறது. மண்டபத்தில் ஒலிபெருக்கிவாய்திறக்கவில்லை; மெய்மறந்த மேடையில் உள்ளங்களை பறிகொடுத்துவிடுகின்றனர்.

தருப்பைப் புல் எடுத்து வருவதற்காக சந்திரமதியின் மகன் லோகிதாசனை அழைத்துச் செல்லும் அயற் பிள்ளைகளாக வந்த என். செல்வராசாவும் பி. வரதனும் சிரிப்பூட்டினர்கள்; சிரித்தார்கள் ரசிகர்கள். காலமகேசன்னடையாக நடித்த வி. மார்க்கண்டுவின் நடிப்பையும் பாராட்டலாம்.

தருப்பைப்புல் கொண்டுவரச்சென்ற மகன் பாம்பு தீண்டி இறந்தான் என்பதைக் கேட்டதும் வெகுண்ட மரம்போல் சாய்கிருள் சந்திரமதி. அந்த இடத்திலே சந்திரமதியாக நடித்த சுப்புலக்ஷ்மி காசிநாதனை பாராட்டலாம். காட்டுத்தனியாக பிணத்தைத் தேடியலையும் போதும் - சுடலையில் பிணத்தை எரிக்க முற்படுகையில் அரிச்சந்திரனுக்குத்தன் நிலையைச்சொல்லும்போதும்-அவள் தான் தன் கணவன் என்பதை

(11-ம் பக்கம் பார்க்க)

**வெளிவந்துள்ளது!**

இதழ் - 3 மலர் - 3

**ஆயுள்வேத பிரதிபிகா**

விலை: ரூ. 2-00

விற்பனையாளர்:

**சுந்தரம் பிறதர்ஸ்,**

மருந்துகள், மருந்துச்சரக்குகள் விற்பனையாளர்

73, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.

**TUITION AVAILABLE**

★ Cost & Works
★ Certified Parts I & II
December / May exams
★ Government Accountancy Service exams in Accounts, Statistics, Industrial Administration, Costing, Auditing etc.

By qualified personnel day time / evening classes, two consequitive week days.

INQUIRIES TO:
S. Narasingham. J. P
Nikona Auction Rooms,
1st. Floor, 166. Hospital Road, Jaffna.

[ஜீ. சி. ஈ. சாதாரணப் பரீட்சைக்கு புவியியல் பாடத்தை ஒரு பாடமாக எழுதும் மாணவர்களுக்கு இப்புவியியல் வினாவிடைகள் உதவி புரிவனவாக இருக்கும்.]

## புவியியல் வினா விடைகள்

— ஆ. சிவராசா —

### வினாப் பகுதி—1

மிகப்பொருத்தமான விடையின் கீழ்க் கீறிடுக

1 பூமி ஒரு (உபகிரகம், கிரகம்) ஆகும்.
2 பூமியின் துணைக்கோள் [சந்திரன், செவ்வாய்] ஆகும்.
3 ஞாயிற்றுத் தொகுதியை [சூரிய குடும்பம் அல்லது சூரிய மண்டலம் அல்லது பால் மண்டலம்] எனவும் அழைப்பர்.
4 பின்வரும் [புளூட்டோ, நெப்டியூன், யூரானஸ், சனி, வியாழன், செவ்வாய், பூமி, வெள்ளி, புதன், கேது] ஆகிய கிரகங்கள் சூரிய குடும்பத்திலுள.
5 ஞாயிற்றுத் தொகுதி என்பது (பூமியையும் அதனைச் சார்ந்த கோள்களையும், சூரியனையும் சூரியனைச் சுற்றிவரவுள்ள கோள்களையும்) குறிக்கும்.
6 கிரகங்கள் சூரியனை (வட்டப்பாதையில், நீள்வட்டப் பாதையில்) வலம்வருகின்றன.
7 சூரியனுக்கு அண்மையில் (வியாழன், புதன்) உளது.
8 துணைக்கோள் அற்ற கிரகங்கள் (புதன், வெள்ளி, பூமி, புளூட்டோ) என்பனவாகும்.
9 மிகப்பெரிய கிரகம் (சனி, வியாழன்) ஆகும்.
10 (யூரானஸ், நெப்டியூன், புளூட்டோ, சனி) ஆகியன வாயு வடிவமுள்ளன.
11 (வியாழன், சனி யூரானஸ், நெப்டியூன், புளூட்டோ) ஆகியவை துணைக்கோள்களைக் கொண்டுள.
12 சந்திரன் பூமியினின்றும் (2,40,000, 8,25,000) மைல் தூரத்திலுளது.
13 பூமியின் விட்டம் அண்ணளவாக (8000, 10,000) மைல்.
14 சூரியனின் விட்டம் [8,64,000, 2,50,000] மைல்களாகும்.
15 சூரியன் பூமி இடைத்தூரம் [9,30,00,000, 10,00,000] மைல்.
16 பூமிஉருண்டை என்பதை (பிளினி, தம்பர், மகெலன்) முதன் முதல் நிருபித்தார்.
17 வடக்குத் தெற்காக பூமியின் விட்டம் (6297, 7926) மைல்களாகும்.
18 கிழக்கு மேற்காக பூமியின் விட்டம் (9700, 7900) மைல்.
19 பூமி உருண்டை வடிவானது என்பதை [புறப்பட்ட இடத்தை திரும்பவும் அடைதல், அடிவானம் வட்டமாகத் தென்படல், சந்திரகிரகணகாலத்தில் சந்திரனில் விழும் பூமியின் நிழல் வட்டமாக இருத்தல், ஏனைய கோள்களும் வட்டமாக இருத்தல், ஏவுகணைகள் செய்மதிகள் மூலம் எடுத்த படங்கள் பூமியை உருண்டையெனக் காட்டின, காற்றுக்கள் சரிந்து வீசுதல்) ஆகிய காரணங்களால் நிரூபிக்கலாம்.
20 புவிச்சுழற்சி என்பது [சூரியனைப் புவி சுற்றுவது, பூமி தன்னைத்தானே சுற்றுவது].
21 புவிச் சுழற்சியினால் (மழையும் வெயிலும், இரவு பகல்] உண்டாகின்றன.
22 பூமியின் அச்சு [66 1/2 பாகை, 23 1/2 பாகை, 90 பாகை சரிந்த நிலையிலுளது.
23 பூமியின் அச்சுச்சாய்வினால் [நேரத் தொகுதிகள், பருவ காலங்கள்] உண்டாகின்றன.
24 புவிச்சுற்றுகை [புவி சூரியனை நீள்வட்டப் பாதையில் சுற்றி வருதலை, சந்திர சூரிய கிரகணம் ஏற்படல்]க் குறிக்கும்.
25 புவிச்சுற்றுகையினால் [இரவு பகல், பருவகாலங்கள்] உண்டாகாது.
26 சூரியனைப் பூமி [கிழக்கு மேற்காக, மேற்குக்கிழக்காக] சுற்றுகின்றது.
27 புவிவொழுக்கு என்பது [பூமி சூரியனைச் சுற்றிவருகின்ற நீள்வட்டப்பாதையை, புவியின் அகலக்கோடுகளின் கோணத்தை] உணர்த்தும்.
28 மார்ச் மாதம் 21ந் திகதி (சூறாவளிகள், இலைதுளிர் பருவச் சமவிராக்காலம்) ஏற்படும்.
29 யூன் மாதம் 21ந் திகதி [கோடைச் சூரியகணநிலை நேரம், வடமேல் பருவப்பெயர்ச்சிக்காற்று] ஏற்படும்.
30 டிசம்பர் 22-ம் திகதி (கடிபுரம் தேர், மாரிச் சூரிய கணநிலை நேரம்) ஏற்படும்.
31 புவியச்சின் சாய்வினால் வடமுனைவும் தென்முனைவும் (6 மாதம் பகலையும், 6 மாதம் இருளையும்) பெறும்.
32 யூன் மாதம் 21-ம் திகதி சூரிய உச்சம் (கடகக் கோட்டில், உச்ச நெடுங்கோட்டில்) நிகழும்.
33 கோடைச் சூரியகண நேரப்பொழுதில் (வடவரைக் கோளம், தென்னரைக் கோளம், கடிய வெப்பத்தைப்பெறும்.
34 கடகக்கோட்டில் சூரியன் உச்சங்கொடுக்கும் காலத்தில் தென்னரைக் கோளத்தில் (கோடை மாரி) காலம் நிலவும்.
35 மகரக்கோட்டில் (டிசம்பர் 22, யூன் 21)ல் சூரியன் உச்சங்கொடுப்பான்.
36 புவிச்சுற்றுகையினால் (கோடை, மாரி, இலைதுளிர், இலையுதிர் அல்லது வசந்த காலங்கள்) உண்டாகின்றன.
37 செப்ரம்பர் 23-ல் சூரிய (மத்திய கோட்டில், சர்வதேச திகதிக்கோட்டில்) நிகழும்.
38 சூரிய உச்சத்தின்போது யூன் மாதம் 21-ல் (வடவரையில், தென்னரை) பகற்பொழுதும், டிசம்பர் 22-ல் (வடவரையில், தென்னரையில்) பகற்பொழுதும் நீண்டிருக்கும்.
39 இலையுதிர் காலச் சமவிராக்காலத்தின்போது (இரவும் பகலும் சமனாக, இரவுப் பொழுது நீண்டு பகற்பொழுது குறுகியும்) இருக்கும்.
40 மார்ச் 21-ல் சூரிய உச்சம் (மத்திய கோட்டில் மகரக்கோட்டில் செம்மணியில்) நிகழும்.
41 அகலக்கோடுகள் (வடக்குத் தெற்காக, கிழக்கு மேற்காக கீறப்படுகின்றன
42 நெடுங்கோடுகளின் திசை (கிழக்கு மேற்காக வடக்குத் தெற்காக) இருக்கும்.
43 பூமியின்சுற்றளவு (15000, 25000) மைல்கள்.
44 (10 பாகை, 15 பாகை, 20 பாகை) இடைவெளியில் அகல நெடுங்கோடுகள் வரையப்படும்.
45 பூமி ஒரு வட்டமெனவும், அதன் சுற்றளவும் 25000 மைல் எனவும் கொண்டு கணித்தபோது இரு பாகைகளுக்கு இடைப்பட்டதூரம் (69 1/2 மைல், 96 1/2 மைல்) ஆகும்.
46 சூரியன் ஒவ்வொரு பாகை இடைவெளியையும் கடக்க எடுக்கும் நேரம் (16 நிமிடம், 4 நிமிடம்) ஆகும்.
47 90 பாகை அகலக்கோட்டினை அகலக்கோடெனக் கூறமுடியாமைக்குக் காரணம் அது ஒரு (வளையமாகும் புள்ளியாகும்).
48 அகலக்கோடுகள் ஒன்றையொன்று (சந்திக்கும், சந்திக்கமாட்டாதன) ஆனால் நெடுங்கோடுகள் (மத்திய கோட்டில் முனைவில்) சந்திக்கின்றன.
49 உயர் அகலக்கோடுகள் என்பது (சற்கடக, மகர ரேகைகளுக்கு, 90 பாகை கிழக்கு மேற்கு நெடுங்கோடுகளுக்கு) அப்பாற்பட்ட கோடுகளை உணர்த்தும்.
50 கிறீன்விச் நெடுங்கோட்டினை (மத்திய நெடுங்கோடு, உச்சநெடுங்கோடு) என்றும் கூறுவர்.
51 180 பாகை நெடுங்கோடு (கிழக்கிற்கும் மேற்கிற்கும், கொழும்பிற்கும் மட்டக்களப்பிற்கும்) பொதுவான ஒரு கோடாகும்.

### வினாப் பகுதி 1-ன் விடைகள்

1. கிரகம்.
2. சந்திரன்.
3. சூரிய குடும்பம் அல்லது பால் மண்டலம்.
4. கேது தவிர.
5. சூரியனையும் சூரியனைச் சுற்றிவரவுள்ள கோள்களையும்.
6. நீள் வட்டப்பாதையில்
7. புதன்
8. முழுவதும்.
9. வியாழன்.
10. முழுவதும்.
11. புளூட்டோ தவிர.
12. 2, 40, 000
13. 8000
14. 8, 64, 000
15. 9, 30, 00,000
16. மகெலன்.
17. 7926
18. 7900
19. காற்றுக்கள் சரிந்து வீசுதலைத் தவிர
20. பூமி தன்னைத் தானே சுற்றுவது.
21 இரவு பகல்
22 23 1/2
23 பருவ காலங்கள்
24 புவி சூரியனை நீள்வட்டப் பாதையில் சுற்றி வருதலை.
25 இரவு பகல்
26 மேற்குக் கிழக்காக
27 பூமி சூரியனைச் சுற்றி வருகின்ற நீள்வட்டப் பாதையை
28 இலை துளிர் பருவச்சமவிராக்காலம்
29 கோடைச் சூரிய கணநிலை நேரம்
30 மாரிச் சூரிய கணநிலை நேரம்
31 ஆம்
32 கடகக் கோட்டில்
33 வடவரைக் கோளம்
34 மாரி
35 டிசம்பர்
36 எல்லாம்.
37 மத்திய கோட்டில்
38 வடவரையில்
39 இரவும் பகலும் சமனாக
40 மகரக் கோட்டில்
41 வடக்குத் தெற்காக
42 வடக்குத் தெற்காக
43 25 000
44 ஏறத்தாள எல்லாம்
45 69 1/2 மைல்
46 4 நிமிடம்
47 புள்ளியாகும்
48 சந்திக்க மாட்டாதன.
49 சற்கடக, மகர ரேகைகளுக்கு
50 உச்ச நெடுங் கோடு
51 கிழக்கிற்கும் மேற்கிற்கும்

# உண்டி கொடு...

# உணவுப் ப...

நாட்டு மக்களுக்கு உணவு அளிக்க இரு பெரு முயற்சிகள் தேவை. ஒன்று காலி இடங்களாக நிலத்தை விடுவதைக்காமல் காட்டாறாக நீரை ஓடவிடாமல், சோம்பேறிகளாக மக்களைத் தூங்கவிடாமல் உணவு உற்பத்தியைப் பெருக்குதல், மற்றொன்று, விளைந்த பொருட்களை வீணடிக்காமல் பாதுகாத்து வைத்தல். இவ்விரு துறைகளிலும் நாம் பெருமளவு முன்னேறி இருக்கிறோம். மக்களின் உணவு உட்கொள்ளும் பழக்கங்களையும் மாற்றுதல் வேண்டும். கோதுமை விளைவு, அரிசி விளைவைக் காட்டிலும் பன்மடங்கு அதிகமாக இருப்பின் கோதுமையை அரிசி போல் பயன்படுத்த மக்கள் முன் வர வேண்டும். எலுமிச்சை, ஆப்பிள், வாழைப் பழம், தக்காளி ஆகியவை அவைகளுக்கான பருவத்தில் அமோகமாக விளைகின்றன. இவற்றை உணவுப் பொருட்களாகப் பக்குவப்படுத்திப் பாதுகாக்க வேண்டும். உணவு படைக்கும் பணியில் ஈடுபட்டுள்ள தொழிற்கூடங்களில் விஞ்ஞான முறைகள் எந்த அளவு பயன் படுத்தப்படுகின்றன என்பதை இக் கட்டுரை வழிக்காண்போம்.

### திடீர் ரொட்டி

ரொட்டிகட ஈஸ்ட் எனப்படும் நுண் உயிர், மாவில் இருக்க வேண்டும். ஈஸ்ட் மூன்று வகையில் செயல்படுகின்றது. மாவில் காற்றுக் குமிழ்களை உண்டாக்கி ரொட்டியின் உள் அமைப்புக்குக் காரணமாகின்றது. மாவைப் புளிக்கச்செய்து மாவிற்குச் சாராயவாசனை யேற்றுகின்றது. மாவினுள் உள்ள புரத இழைகளை முறையாகப் பின்னி ரொட்டிக்கு மிருதுத் தன்மையைக் கொடுக்கின்றது. ஈஸ்ட் இப்பணிகளைக் குறைந்த அளவு 3 மணி நேரம் தேவைப்படுகின்றது. மேலை நாடுகளில் ரொட்டி சுடுபவர்கள் அதிகாலை 4 மணிக்கு ரொட்டி சுட ஆரம்பித்தால் தான் காலை உணவாக வாடிக்கைக் காரர்களுக்கு ரொட்டியை அளிக்கமுடியும். தற்பொழுது அரைத்து அவிக்கும் கருவிகள் பழக்கத்திற்கு வந்துள்ளன. ரொட்டியின் வாசனைக்காக ஈஸ்டைச் சேர்த்தாலும், அக்கருவிகள் ஈஸ்டிற்குப் பதிலாக ரொட்டியின் உள் அமைப்பையும் மிருதுத் தன்மையையும் தமது சுழல் விசையால் உண்டாக்குகின்றன.

### மீன் கட்டிகள்

கடலில் பிடிக்கப்பட்ட மீன்கள் எளிதில் நாற்றமெடுத்துக் கெட்டுவிடுகின்றன. இவை கெடாமல் இருக்கக் குளிர்ந்த பெட்டிகளில் வைக்கிறார்கள். மீனின் தலைப்பகுதியும் வால் பகுதியும் எருவாகப் பயன்படுத்தப்படுகின்றது, உடற்பகுதி மட்டுமே விரும்பி உண்ணப்படுகின்றது. தற்பொழுது மீன்களைப்பிடித்ததும், வால் பகுதிகளை நீக்கிவிட்டு உடற்பகுதியை மட்டும் தண்ணீரில் மிதக்கவிடுகிறார்கள். உடற்பகுதி மிதந்து கொண்டிருக்கும் தண்ணீர், பனிக்கட்டிப்பாறையாகக் குளிர்ப்பெட்டிகளில் மாற்றப்படுகிறது. இவ்வாறு உண்டாக்கப்பட்ட மீன் கட்டிகளைப் பெட்டிகளில் அடைத்து வெளி நாடுக்கு அனுப்புகிறார்கள். வாடிக்கைக்காரர்களுக்கு அவர்கள் வேண்டிய அளவிற்குக் கட்டிகளை அறுத்துக் கொடுக்கிறார்கள். ரம்பம் அல்லது கத்தியால் கட்டிகளை அறுக்கும்பொழுது தண்ணீராது மீன் சேதமடையாமல் இருக்க, மின்சாரத்தால் செயற்படும் வெட்டும் கருவிகள் உண்டாக்கப்பட்டுள்ளன. இம் மீன் கட்டிகள் பதினைந்து நாட்கள் ஆனாலும் கெடாமல் இருக்கின்றன.



...யில் உள்ள நீரா... பாலினுள் ஒரு நெ... செலுத்திப் பாலை... வெப்பநிலை அடை... லாம். இதற்குப்பி... மிகள் நீக்கப்பட்ட... கலன்களில் பாலை... வைக்கலாம். பா... வின் துணையின்றி இ... பாலை அடைப்... வில் அடைத்து... சென்று பயநா... பயன்படுத்தலாம்.

### பொட்டலங்களில்...

எண்ணெய்

வெண்ணெய் ... ஆகிய கொழுப்புப்...

**எஸ். இலக்குமிகாந்தன்**
எம். எஸ். சி.

### கெடாதபால்

பால் எளிதில் கெட்டுவிடுகின்றது. இதற்கு இரண்டு காரணங்கள் உண்டு. பாலினுள் உள்ள புரதம், சர்க்கரை, பாலாடை, வெண்ணெய் ஆகியவை மனித உடலின் வளர்ச்சிக்கு உதவுவதைப் போல் பாக்டீரியா வளரவும் துணை செய்கின்றன. பாலின் ஈரத்தன்மையும் பாக்டீரியா வளரத் துணைசெய்கிறது. எனவே பால் அதிகமாகக் கிடைக்கும் மேல் நாடுகள், பாலைச் சூடாக்கி அதிலுள்ள நீரை ஆவியாக வெளியேற்றிப் பால் பொடியைத் தயாரிக்கின்றன. பொதுமக்களுக்குப் பால் விற்பனைசெய்யும் கூட்டுறவு நிலையங்களும் பாலைச் சூடாக்கிப் பாக்டீரியாக்களைக் கொன்று, பிறகு, சூடாக்கப்பட்ட பாலைக் குளிர்வித்து வீடுகளுக்கு வழங்குகின்றன. இம்முறைக்கு பாய்சர் (Pasteurisation) முறை என்று பெயர். ஆனாலும் ஒரு நாளுக்குமேலாக இப்பாலைப் பயன்படுத்தமுடியாது.

தற்போது UHT முறை (Ultra - high Temperatue Process] என்ற ஒரு முறை வழக்கத்திற்கு வந்துகொண்டிருக்கிறது. இம்முறையில் பால் அதன் கொதிநிலைக்கும் மேலாகத் திடீரென்று சூடாக்கப்பட்டு, உடனே குளிர்விக்கப்படுகின்றது. பால் கொதிநிலையில் அதிக நேரம் இல்லாதபடியால் அதன் மணம் அழிவதில்லை. பால் 132 பாகை வெப்பநிலையில் ஒரு நொடி நேரம் வைக்கப்படுகின்றது. பாலை ஒரு நொடி நேரம் சூடேற்றப்பட்ட குழாய்களுள் செலுத்தி குளிர்ச்சியடைய வைக்கலாம்; அதுமுடியாவிட்டால், அதிகவெப்பநிலை...

கள் கட்டியாகக்கின்றன. இவற்றைப் பொட்டலங்களாக... விடலாம். தேங்... ணெய், கடலை எ... மீனெண்ணெய்... திரவப்பொருட்கள்... அதால் இவற்றைப்... ல்லை. டின்களில்... இப் பயன்படுத்... பனிக்காலத்தில்... எண்ணெய் உறைந்... வாக மாறுவதைப்... ரோம். பாக்டிக்கள்... ணெய் கட்டியா... வெளியேற மறு... பாட்டுக்களைச் சூட... தான் எண்ணெய்... முடியும். திரவ நி... ணெய்களின்... வைப் பார்ப்போ... அவற்றினுள் அதிக... வெளிகள் உள்ள... ஜன் அணுவை... வெளிகளில் புகுத்... யின் திரவங்களைக்... வாக மாற்றிவி... எனவே இரசாயன... கைகளைத் தாண்டு... அணுக்களைத்... ணெயில் சேர்த்து... ணெய் ஹைட்ரஜ... மண்டலத்தில் சூட... அவை கட்டியா... வாக மாறுகின்றன... டங்களில் கட்டி... பட்ட எண்ணெய்ப்... களைக் கடைகளில்... முடியும்.

### தாவர இறைச்சி...

சோழத்திலிருந்து... கப்படும் எண்ணெ... எண்ணெய், பட்... ருந்து எடுக்கப்படு... ணெய், தேங்காய்... தகுந்த வாசனைப்... களுடன் சேர்த்து... வைத்து... மாற்றி விடுகிறார்...

